

**ஹென்றி பி. ஐரிங்**
பிரதான தலைமையில் முதலாம் ஆலோசகர்

# நன்மை செய்யப் பயப்படாதிருங்கள்

*நாம் அவரது கன்மலையின் மீது நிற்கும்போது, சந்தேகமும் பயமும் குறைகிறது, நன்மை செய்யும் வாஞ்சை கூடுகிறது என கர்த்தர் நமக்குக் கூறுகிறார்.*

என் அன்பு சகோதர சகோதரிகளே, நான் இன்று பேசும்போது, கர்த்தரின் ஆவி நம்மோடு இருக்கும்படியாக நான் தாழ்மையாக ஜெபிக்கிறேன். அவரது சபையாகிய இந்த சபைக்காகவும், உருக்கமான ஜெபங்களில் நாம் பெற்ற உணர்த்துதலுக்காகவும், உணர்த்தப்பட்ட பிரசங்கங்களுக்காகவும், தேவ தூதர்கள்போன்ற பாடல்களுக்காகவும் கர்த்தரிடத்தில் என் இருதயம் நன்றியால் நிறைந்திருக்கிறது.

கடந்த ஏப்ரலில், நான் உள்ளிட்ட உலகமுழுவதிலும் உள்ளவர்களின் இருதயங்களை கலக்கிய செய்தியை தலைவர் தாமஸ் எஸ். மான்சன், அளித்தார். அவர் மார்மன் புஸ்தகத்தின் வல்லமையைப்பற்றி பேசினார். நாம் படித்து, தியானித்து அதன் போதனைகளைப் பயன்படுத்துமாறு நம்மை வற்புறுத்தினார். மார்மன் புஸ்தகத்திலுள்ளவற்றை ஒவ்வொரு நாளும் படிக்கவும், சிந்திக்கவும், மார்மன் புஸ்தக கட்டளைகளைக் கைக்கொள்ளவும் நாம் நேரம் ஒதுக்கினால் நாம் அதன் சத்தியத்தைப்பற்றிய உயிரோட்டமுள்ள சாட்சி பெறலாம், ஜீவிக்கிற கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியின் விளைவு, கஷ்டமான நேரங்களில் பாதுகாப்பாக நம்மைக் கொண்டு சேர்க்கும். (**See "The Power of the Book of Mormon," Liahona, May** 2017, 86–87.)

உங்களில் அநேகரைப்போல தீர்க்கதரிசியின் வார்த்தைகளை, எனக்கு கர்த்தரிடமிருந்து வந்த செய்தியாக நான் கேட்டேன். நான் அந்த வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய முடிவு செய்தேன். இப்போது, நான் சிறுவனாக இருந்ததிலிருந்தே, மார்மன் புஸ்தகம் தேவனுடைய வார்த்தை எனவும், பிதாவும் குமாரனும் ஜோசப் ஸ்மித்துக்கு தரிசனமாகி, அவருடன் பேசினர் எனவும், கர்த்தரின் சபைக்கு ஆசாரியத்துவ திறவுகோல்களை மறுஸ்தாபிதம் செய்ய பூர்வகால அப்போஸ்தலர்கள் ஜோசப் ஸ்மித்திடம் வந்தார்கள் எனவும் சாட்சியை நான் உணர்ந்திருக்கிறேன்.

அந்த சாட்சியோடு 50 ஆண்டுகளுக்கும் மேலாக நான் மார்மன் புஸ்தகத்தை வாசித்திருக்கிறேன். ஆகவே ஒருவேளை தலைவர் மான்சனின் வார்த்தைகள் வேறொருவருக்கானது என்று நியாயமாக நான் நினைத்திருக்கலாம். இருப்பினும் உங்களில் அநேகரைப்போல தீர்க்கதரிசியின் ஊக்கமும், வாக்குத்தத்தமும் மேலும் முயற்சி செய்ய என்னை அழைத்ததாக நான் உணர்ந்தேன். நான் செய்ததை அநேகர் செய்திருக்கிறீர்கள். அதிகமான முயற்சியுடன் ஜெபித்திருக்கிறீர்கள்,

மிகவும் ஆர்வத்துடன் வேதங்களை தியானித்திருக்கிறீர்கள், கர்த்தருக்கும், அவருக்காக பிறருக்கும் சேவை செய்ய கடினமாக முயன்றிருக்கிறீர்கள்.

எனக்கும் உங்களில் அநேகருக்கும், மகிழ்ச்சியான முடிவு தீர்க்கதரிசி வாக்குத்தத்தம் செய்ததாகவே இருந்திருக்கிறது. அவரது உணர்த்தப்பட்ட ஆலோசனைகளை இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர்கள், ஆவியை தெளிவாகக் கேட்டிருக்கிறீர்கள். சோதனையை எதிர்க்க அதிக வல்லமையை கண்டிருக்கிறோம், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவிலும், அவரது சுவிசேஷத்திலும், அவரது ஜீவனுள்ள சபையிலும் அதிக விசுவாசத்தை உணர்ந்திருக்கிறோம்.

உலகத்தில் குழப்பங்கள் அதிகரிக்கிற காலத்தில் சாட்சியின் அந்த அதிகரிப்புகள், சந்தேகத்தையும் பயத்தையும் துரத்தி, நமக்கு சமாதானத்தின் உணர்வுகளைக் கொண்டு வருகிறது. தலைவர் மான்சனின் ஆலோசனையைக் கேட்டது, எனக்கு பிற இரண்டு அற்புதமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது, முதலாவது, உலகத்தின் குழப்பங்கள் அதிகரிப்பதாகத் தோன்றினாலும், அவர் வாக்குத்தத்தம் செய்த ஆவி, முன்னால் இருப்பது குறித்து ஒரு நேர்மறை உணர்வை உருவாக்கியிருக்கிறது. இரண்டாவதாக, எனக்கும் உங்களுக்கும் துயரத்திலிருப்போர் மீது ஒரு அதிகப்படியான அன்பை உணரும்படி செய்திருக்கிறது. பிறரை மீட்க செல்லும் அதிக வாஞ்சையை நாம் உணர்ந்திருக்கிறோம். அந்த வாஞ்சை தலைவர் மான்சனின் ஊழியம் மற்றும் போதனையின் இருதயமாக இருந்திருக்கிறது.

அவர்களுக்கு முன்னேயிருந்த வேலைகள் அதிகமாயிருந்ததாகத் தோன்றினாலும், கர்த்தர் பிறர் மீது அன்பையும், தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்துக்கும் ஆலிவர் கௌட்ரிக்கும் தைரியத்தையும் வாக்களித்தார். தேவையான தைரியம் அவர்களது கன்மலையாக அவரில் அவரது விசுவாசத்திலிருந்து வரும் என கர்த்தர் சொன்னார்.

"என் குமாரர்களே, நன்மை செய்ய பயப்படாதிருங்கள், ஏனெனில் நீங்கள் எதை விதைத்தாலும் அதையே அறுப்பீர்கள். ஆகவே, நீங்கள் நன்மையை விதைத்தால் உங்கள் பிரதிபலனாக நன்மையையே அறுப்பீர்கள்.

"ஆகவே பயப்படாதே சிறுமந்தையே, நன்மை செய், பூலோகமும் பாதாளமும் உங்களுக்கு எதிராக இணைந்தாலும், நீங்கள் எனது கன்மலையின்மேல் கட்டப்பட்டிருந்தால், அவை ஜெயிக்க முடியாது.

"இதோ, நான் உங்களைக் கடிந்து கொள்வதில்லை, உங்கள் வழிகளில் சென்று இனிமேலும் பாவஞ்செய்யாதிருங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட பணியை தெளிந்த புத்தியோடு செய்யுங்கள்.

"ஒவ்வொரு சிந்தனையிலும் என்னைப் பாருங்கள், சந்தேகப்படாதிருங்கள், பயப்படாதிருங்கள்.

"என் விலாவில் குத்திய தழும்புகளைப் பாருங்கள். என் கைகளிலும் கால்களிலும் ஆணித்தழும்புகளைப் பாருங்கள். விசுவாசமாயிருங்கள், என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள், நீங்கள் பரலோக இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள்." (கோ.உ 6:33—37).

கர்த்தர் தனது மறுஸ்தாபித தலைவர்களுக்குச் சொன்னார், அவர் நமக்கும் சொல்கிறார், நாம் அவரது கன்மலையின்மேல் விசுவாசத்தோடு நின்றால், சந்தேகமும் பயமும் குறைகிறது, நன்மை செய்யும் வாஞ்சை அதிகரிக்கிறது. இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியை நமது இருதயங்களில் நிறுத்த தலைவர் மான்சனின் அழைப்பை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் வல்லமையையும், வாஞ்சையையும், நமது சொந்த தேவைகள் மீது அக்கறையில்லாமல், பிறரை மீட்கச் செல்லும் வாஞ்சையையும் பெறுகிறோம்.

நம்புகிற பிற்காலப் பரிசுத்தவான்கள் பயங்கரமான சோதனைகளை எதிர்கொள்ளும்போது, அநேக நேரங்களில் இந்த விசுவாசத்தையும் தைரியத்தையும் பார்த்திருக்கிறேன். ஒரு உதாரணமாக ஜூன் 5, 1976ல் டீட்டோன் அணை உடைந்தபோது, நான் ஐடஹோவில் இருந்தேன். ஒரு தண்ணீர் சுவர் கீழே வந்தது. ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறினர். ஆயிரக்கணக்கான வீடுகளும் கடைகளும் அழிக்கப்பட்டன. அதிசயமாக 15 பேருக்கும் குறைவானவர்களே கொல்லப்பட்டனர்.

நான் அங்கே பார்த்ததை, இயேசு கிறிஸ்துவின் சாட்சியாகிய கன்மலை மீது, பிற்காலப் பரிசுத்தவான்கள் உறுதியாக நிற்கும்போது, நான் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு எந்த சந்தேகமும் இல்லாததால் அவர் அவர்களைக் கண்காணிக்கிறார், அவர்கள் பயமற்றவர்களாகிறார்கள். பிறருடைய நிவாரணத்துக்குச் செல்ல அவர்கள் தங்கள் சொந்த பாடுகளை உதாசீனப்படுத்துகிறார்கள். எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல், கர்த்தர் மீதான அன்பினிமித்தம் அப்படிச் செய்கிறார்கள்.

உதாரணமாக, டீட்டன் அணை உடையும்போது, அவர்களது வீட்டிலிருந்து மைல்களுக்கு அப்பால் ஒரு பிற்காலப் பரிசுத்தவான் தம்பதியர் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். செய்தியை அவர்கள் ரேடியோவிலே கேட்ட உடனே அவர்கள் ரெக்ஸ்பர்க்குக்குத் திரும்பினர். அது அழிந்து விட்டதா, என தங்கள் வீட்டைப் பார்க்கச் செல்வதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் ஆயரைத் தேடிச் சென்றனர். ஒரு மறுசீரமைப்பு கட்டிடமாகப் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த கட்டிடத்தில் அவர் இருந்தார். மஞ்சள் வண்ண பள்ளி பேருந்துகளில் வந்து கொண்டிருந்த, ஆயிரக்கணக்கான தன்னார்வலர்களை வழிநடத்த உதவிக்கொண்டிருந்தார்.

அத்தம்பதியினர் ஆயரிடம் நடந்து சென்று, சொன்னார்கள், "இப்போதுதான் வந்தோம். ஆயரே, நாங்கள் உதவி செய்ய எங்கே போவது?" ஒவ்வொரு வீடாக அத்தம்பதியினர் சேற்றையும் தண்ணீரையும் மொண்டு ஊற்றினர். பல நாட்களாக காலை முதல் இரவுவரை அவர்கள் வேலை செய்தனர். கடைசியாக ஓய்வெடுத்து, தங்கள் வீட்டைப் பார்க்கச் சென்றனர். சுத்தம் செய்வதற்கு எதுவுமில்லாது, அது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருந்தது. ஆகவே அவர்கள் உடனே ஆயரிடம் திரும்பி வந்தனர். அவர்கள் கேட்டனர், "ஆயரே எங்களுக்கு உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா?"

அமைதியான தைரியம் மற்றும் தயாளத்தின் அற்புதம், கிறிஸ்துவின் பரிசுத்தமான அன்பு, பல வருடங்களாக உலகம் முழுவதிலும் திரும்பவும் காட்டப்படுகிறது. மிசௌரியில் தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தின் காலத்தில் துன்புறுத்தல்களும் சோதனைகளும் இருந்த பயங்கரமான சமயத்தில் இது நடந்தது. பிரிகாம் யங் நாவூவிலிருந்து பரிசுத்தவான்களை வழிநடத்தி, மேற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுவதிலும் இருந்த பாலைவனப் பிரதேசங்களெங்கும் பரிசுத்தவான்களை வழிநடத்தி கர்த்தருக்காக சீயோனை உருவாக்க ஒருவருக்கொருவர் உதவ அழைத்தபோது இது நடந்தது.

அந்த முன்னோடிகளின் குறிப்பிதழ் எழுத்துக்களை நீங்கள் வாசித்தால், சந்தேகத்தையும் பயத்தையும் விசுவாசத்தின் அற்புதம் விரட்டியதை நீங்கள் பார்க்கிறீர்கள். தங்கள் சொந்த மந்தைகளுக்கும், உழப்படாத வயல்களுக்கும் செல்லுமுன், கர்த்தருக்காக வேறொருவருக்கு உதவ, தங்கள் சொந்த நலத்தை துறப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

சுத்தம் செய்யும் முயற்சிகளை ஆரம்பிக்க, பிற்காலப் பரிசுத்தவான்கள் பிற சபைகளுடனும், உள்ளூர் சமுதாயப் பிரிவுகளுடனும், தேசிய ஸ்தாபனங்களுடனும் பங்குதாரர்களான, போர்ட்டோ ரிக்கோவிலும், செயின்ட் தாமஸிலும், ப்ளோரிடாவிலும், இர்மா சூறாவளிக்குப் பிறகு அதே அற்புதத்தை சில நாட்களுக்கு முன் நான் பார்த்தேன்.

ரெக்ஸ்பர்க்கிலுள்ள என் நண்பர்களைகளைப்போல, ப்ளோரிடாவிலுள்ள சபை அங்கத்தினரல்லாத ஒரு தம்பதியர், தங்களுடைய சொந்த சொத்துக்களில் உழைப்பதைவிட சமுதாயத்திற்கு உதவுவதில் கவனம் செலுத்தினர். அவர்களுடைய வாகனம் செல்லும் பாதையை அடைத்துக்கொண்டிருந்த ஒரு பெரிய மரத்தை அகற்ற, பிற்காலப் பரிசுத்தவான்களான சில அண்டைவீட்டார் அவர்களுக்குதவியதில் உணர்ச்சிவசப்பட்டு, தங்களுடைய வீட்டிற்குத் தேவையானதை கர்த்தர் கொடுப்பார் என்ற விசுவாசத்தில் மற்றவர்களுக்கு உதவ தாங்கள் திரும்பியதாக தம்பதியர் விவரித்தார்கள். உதவி செய்ய நமது சபை அங்கத்தினர்கள் வந்துசேருவதற்கு முன்பு தம்பதியர் ஜெபித்தனர் என பின்னர் கணவர் விவரித்தார். உதவி வரும் என ஒரு பதிலை அவர்கள் பெற்றார்கள். அந்த உறுதிப்பாட்டிற்குப் பின் சில மணிநேரங்களில் அது வந்தது.

மஞ்சள் உதவும் கரங்கள் டி-சட்டைகளை அணிந்திருந்த பிற்காலப் பரிசுத்தவான்களை "மஞ்சள் தூதர்கள்" என சிலர் அழைக்கத் தொடங்கியதாக ஒரு செய்தியை நான் கேள்விப்பட்டேன். ஒரு பிற்காலப் பரிசுத்தவான் அவளது காரை பழுதுநீக்க எடுத்துச் சென்றார், அவளுக்கு உதவிக்கொண்டிருந்த மனுஷன், தன் முற்றத்திலிருந்து மரங்களை மஞ்சள் சட்டையுடன் இருந்தவர்கள் அகற்றியபோது, அவர் அடைந்த "ஆவிக்குரிய அனுபவத்தை" விவரித்தார், அவர் சொன்னார், "அவர்கள் தேவனின் பிள்ளையாயிருப்பது பற்றி சில பாடல்கள் பாடினர்."

நமது மதத்தைச் சாராத ப்ளோரிடாவின் மற்றொருவர் அவரது அழிந்துபோன குடியிருப்பில் வேலை செய்துகொண்டிருந்தபோது, பிற்காலப் பரிசுத்தவான்கள் உதவிசெய்ய அவரது வீட்டிற்கு வந்தபோது அவர் உணர்ச்சிவசப்பட்டு, வியப்புற்று கண்ணீரோடு சொன்ன, "ஒரு தூய்மையான அற்புதம்" என்ற அவரின் வார்த்தைகளை தன்னார்வமுள்ளோர் உண்டாக்கினார்கள். அவர்கள் கருத்தாய் மட்டுமே சேவை செய்யவில்லை, சிரிப்புடனும் புன்னகையோடும், திரும்ப எதையும் ஏற்றுக்கொள்ளாமல் செய்தார்கள்.

சனிக்கிழமை மாலையில், நான் ப்ளோரிடாவில் ஒரு பிற்காலப் பரிசுத்தவான்கள் குழுவைச் சந்தித்தபோது அந்த சிரத்தையைப் பார்த்தேன், அந்த சிரிப்பைக் கேட்டேன். அவர்களில் சிலரது கரங்களை நான் குலுக்கும்படிக்கு தன்னார்வலர்கள் தங்கள் சுத்தப்படுத்தும் வேலைகளை முன்னமேயே நிறுத்தியிருந்தனர். கடந்த இரவில் ஜார்ஜியாவிலுள்ள பிணையத்தின் 90 பேர் ப்ளோரிடாவின் மீட்புக்கு உதவ இணைய ஒரு திட்டம் தீட்டியிருக்கின்றனர்.

அவர்கள் காலை 4.00 மணிக்கு ஜார்ஜியாவை விட்டுக் கிளம்பி, பல மணி நேரங்கள் பயணம்செய்து, நாள் முழுவதும் வேலை செய்தனர், அடுத்த நாளும் வேலை செய்ய திட்டமிட்டனர்.

இவை அனைத்தையும் அவர்கள் புன்சிரிப்புடனும், நகைச்சுவையுடனும் விவரித்தனர். அவர்கள் வேலைக்குத் திரும்பச் செல்லும்படியாக நன்றி சொல்வது நிறுத்தப்பட வேண்டும் என விரும்புகின்றனர் என்பதே அவர்களது ஒரே மன அழுத்தம் என உணர்ந்தேன். அடுத்த மீட்புக்குழுவிடம் செல்ல நாங்கள் எங்கள் வாகனங்களில் ஏறிய உடனே, பிணையத் தலைவர் தன் சங்கிலி வாளை இயக்கி, விழுந்த மரங்களை வெட்டினார், ஆயர் மரத் துண்டுகளை அகற்றிக் கொண்டிருந்தார்.

அந்த நாளின் ஆரம்பத்தில் அடுத்த இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு நாங்கள் நகர்ந்தபோது, காரின் அருகில் ஒருவர் வந்து, தன் தொப்பியை எடுத்துவிட்டு, தன்னார்வலர்களுக்காக நன்றி சொன்னார். அவர் சொன்னார், "நான் உங்கள் சபை அங்கத்தினரல்ல, நீங்கள் எங்களுக்காகச் செய்திருப்பதை என்னால் நம்ப முடியவில்லை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக." அவருக்குப் பக்கத்திலிருந்த எல்.டி.எஸ் தன்னார்வலர் புன்னகைத்துவிட்டு, அவர் புகழப்பட வேண்டியவரில்லை என்பது போல தன் தோள்களை சுருக்கினார்.

ஜார்ஜியாவிலிருந்து தன்னார்வலர்கள் தன்னால் நம்ப முடியாத இந்த மனுஷனுக்கு உதவ வந்திருக்கும்போது, அந்த பேரழிவிலிருக்கும் ப்ளோரிடா பகுதியிலிருந்த நூற்றுக்கணக்கான எல்.டி.எஸ் தன்னார்வலர்கள், ஜனங்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற ப்ளோரிடாவிலுள்ள மற்றொரு இடத்துக்கு நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம்பண்ணி சென்றிருக்கின்றனர்.

அன்று, நான் தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்தின் தீர்க்கதரிசன வார்த்தைகளை நினைத்து, நன்கு புரிந்து கொண்டேன்: "தேவ அன்பால் நிறைந்த ஒருவன், தன் குடும்ப ஆசீர்வாதத்தோடு திருப்தியடைவதில்லை. ஆனால் உலக முழுவதிலுமுள்ள அனைத்து மனுஷ இனத்தை ஆசீர்வதிக்க விரும்புகிறான்." (**Teachings of Presidents of the Church: Joseph Smith** [2007], 426).

எங்கெங்கிலுமுள்ள பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அப்படிப்பட்ட அன்பை நாம் பார்க்கிறோம். உலகத்தில் சோக நிகழ்வு நடக்கிற ஒவ்வொரு சமயத்திலும், பிற்காலப் பரிசுத்தவான்கள் சபையின் மனிதாபிமான முயற்சிகளுக்கு நிதியளித்து உதவ முன்வருகின்றனர். ஒரு விண்ணப்பம் தேவைப்படுவதில்லை. உண்மையாக சில சந்தர்ப்பங்களில், அப்பணியை

வழிநடத்துபவர்கள் அவர்களை வரவேற்க ஆயத்தப்படும்வரை, தன்னார்வலராக இருக்க வருவோரை மீட்புப் பணியிடத்துக்கு பிரயாணம் பண்ணுவதற்குக் காத்திருக்குமாறு கேட்க வேண்டியிருக்கிறது.

ஆசீர்வதிக்கும் வாஞ்சை, இயேசு கிறிஸ்து, அவரது சுவிசேஷம், அவரது மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சபை மற்றும் அவரது தீர்க்கதரிசியைப்பற்றி, ஜனங்கள் சாட்சி பெறுவதன் கனியாகும். அதனால்தான் கர்த்தரின் ஜனம் சந்தேகிப்பதில்லை, பயப்படுவதில்லை. அதனால்தான் ஊழியக்காரர்கள் உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும், சேவை செய்ய முன்வருகிறார்கள். அதனால்தான் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் பிறருக்காக ஜெபிக்கின்றனர். அதனால்தான் தலைவர்கள் மார்மன் புஸ்தகத்தை தங்கள் இருதயத்துக்குள் கொண்டு சென்று அதில் மூழ்குமாறு தலைவர் மான்சன் கொடுத்த வேண்டுகோளை இளைஞர்களுக்கு சவாலாகக் கொடுக்கின்றனர். தலைவர்கள் ஊக்குவிப்பதால் கனி வருவதில்லை, ஆனால், விசுவாசத்துடன் செயல்படும் இளைஞர்களாலும் அங்கத்தினர்களாலும் செயல்பட வைக்கப்பட்ட சுயநலமற்ற தியாகம் தேவைப்படும் விசுவாசமான அது, தேவ அன்பை அவர்கள் உணரத்தக்கதாக அவர்களை அனுமதிக்கிற இருதய மாற்றத்தைக் கொண்டு வருகிறது.

தீர்க்கதரிசியின் ஆலோசனைகளை நாம் தொடர்ந்து பின்பற்றும்போது, எவ்வகையிலும் நமது இருதயங்கள் மாறிவிடுகின்றன. ஒரு முயற்சிக்குப் பின்னர் நாம் முயற்சிப்பதை நிறுத்திக் கொண்டால், மாற்றம் மங்கும்.

விசுவாசமிக்க பிற்காலப் பரிசுத்தவான்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும், மார்மன் புஸ்தகத்தை தேவ வார்த்தையாகவும், அவரது உண்மையான சபையின் ஆசாரியத்துவ திறவுகோல்களின் மறுஸ்தாபிதத்திலும், தங்கள் விசுவாசத்தை அதிகரித்திருக்கின்றனர். அந்த அதிகரித்த சாட்சி அதிக தைரியத்தைக் கொடுத்து, தேவனின் பிற பிள்ளைகள் மீதும் அக்கறையை கொடுத்திருக்கிறது. ஆனால் வரவிருக்கிற சவால்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் அதிகமாகக்கூட தேவைப்படும்.

விவரங்களை நாம் முன்னறிய முடியாது, ஆனால் நாம் விசாலமான தோற்றத்தை அறிவோம். கடைசி நாட்களில் உலகம் குழப்பத்திலிருக்கும் என நாம் அறிவோம். வருகிற எந்த பிரச்சினைக்கு மத்தியிலும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஒவ்வொரு தேசத்துக்கும், ஜாதிக்கும், பாஷைக்கும், ஜனத்துக்கும், எடுத்துச் செல்ல கர்த்தர் விசுவாசமிக்க பிற்காலப் பரிசுத்தவான்களை வழிநடத்துவார். அவர் திரும்பவும் வரும்போது, அவரை வரவேற்க கர்த்தரின் உண்மையான சீஷர்கள் தகுதியாயும் ஆயத்தப்பட்டும் இருப்பார்கள் என நாம் அறிவோம். நாம் பயப்படத் தேவையில்லை.

ஆகவே, நமது இருதயங்களில் நாம் ஏற்கனவே விசுவாசத்தையும் தைரியத்தையும் கட்டியிருப்பதால், கர்த்தர் நம்மிடமும், நமக்குப் பின்னால் வரவிருக்கிற தலைமுறைகளிடமும், அதிகம் எதிர்பார்க்கிறார். அவர்கள் அதிக பெலத்துடனும் தைரியத்துடனும் இருக்க வேண்டும், ஏனெனில் நாம் செய்ததைவிட அவர்கள் பெரிய கடினமான காரியங்களைச் செய்வார்கள். நமது ஆத்துமாக்களின் சத்துருவிடமிருந்து அவர்கள் அதிகரிக்கும் எதிர்ப்பை எதிர்கொள்ளுவார்கள்.

நாம் முன்னேறிச் செல்லும்போது நேற்மறையான வழி கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஒவ்வொரு சிந்தனையிலும் என்னை நோக்கிப் பாருங்கள், சந்தேகப்படாதிருங்கள், பயப்படாதிருங்கள்" (கோ.உ 6:36). அதை எப்படிச் செய்வதென தலைவர் மான்சன் நமக்குச் சொன்னார். நாம் மார்மன் புஸ்தகத்தையும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளையும் சிந்தித்து பயன்படுத்த வேண்டும். எப்போதும் ஜெபியுங்கள். நம்புங்கள். முழு இருதயத்தோடும், பராக்கிரமத்தோடும், மனதோடும், பெலனோடும் கர்த்தருக்கு சேவை செய்யுங்கள். கிறிஸ்துவின் பரிசுத்த அன்பான தயாளத்துவத்தின் வரத்துக்காக, நமது இருதயங்களில் முழு சக்தியோடும் நாம் ஜெபிக்க வேண்டும். (மரோனி 7:47—48 பார்க்கவும்). எல்லாவற்றுக்கும் மேலாக தீர்க்கதரிசன ஆலோசனையைப் பின்பற்றுவதில், ஸ்திரமாகவும், விடாமுயற்சியுடனும் இருக்க வேண்டும்.

வழி கடினமாயிருக்கும்போது, நாம் கர்த்தரின் வாக்குத்தத்தத்தைச்

சார்ந்திருக்கலாம், இரட்சகரின் வார்த்தைகளை அவர் அடிக்கடி குறிப்பிடும்போது தலைவர் மான்சன் நமக்கு நினைவூட்டியிருக்கிற, வாக்குத்தத்தம்: "உங்களை யார் வரவேற்றாலும் நான் அங்கேயிருப்பேன், ஏனெனில் நான் உங்கள் முகத்துக்கு முன்னே போவேன். நான் உங்கள் வலது புறத்திலும் இடது புறத்திலும் இருப்பேன், உங்கள் இருதயங்களில் என் ஆவி இருக்கும். உங்களைத் தாங்க எனது தூதர்கள் உங்களைச் சுற்றிலுமிருப்பார்கள்." (கோ.உ 84:88).

அவரது பணியில் நீங்கள் இருக்கும்போதெல்லாம் கர்த்தர் உங்கள் முகத்துக்கு முன்னே போவார் என நான் சாட்சியளிக்கிறேன். சிலசமயங்களில் உங்களைத் தாங்குகிற தூதர்களால் நீங்கள் சூழப்பட்டிருப்பீர்கள். ஆனால் ஒவ்வொரு திருவிருந்து ஆராதனையிலும் நீங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறபடி, உங்கள் இருதயங்களில் அவரது ஆவியை எப்போதும் பெற்றிருப்பீர்கள். நீங்கள் அவரது கட்டளைகளுக்கு மட்டும் கீழ்ப்படிய வேண்டும்.

பூமியில் தேவ இராஜ்யம் இருக்க சிறந்த நாட்கள் வரவிருக்கின்றன. தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் நாட்களிலிருந்தே இருக்கிறபடி, எதிர்ப்பு இயேசு கிறிஸ்துவில் நமது விசுவாசத்தை அதிகரிக்கும். விசுவாசம் எப்போதும் பயத்தை தோற்கடிக்கிறது. ஒன்றுபட்டு நிற்பது ஒற்றுமையை உருவாக்குகிறது. தேவையிலிருப்போருக்கான உங்களது ஜெபம், நேசிக்கிற தேவனால் பதிலளிக்கப்படும். அவர் ஒருபோதும் தூங்குவதுமில்லை, உறங்குவதுமில்லை.

பிதாவாகிய தேவன் ஜீவிக்கிறார், அவரிடத்தில் வீட்டுக்கு நீங்கள் திரும்பி வர அவர் விரும்புகிறார் என நான் சாட்சியளிக்கிறேன். இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான சபை. அவர் உங்களை அறிகிறார், நேசிக்கிறார், உங்களைக் கண்காணிக்கிறார். உங்கள் பாவங்களுக்காகவும், பரலோக பிதாவின் அனைத்து பிள்ளைகளின் பாவங்களுக்காகவும் அவர் பாவ நிவர்த்தி செய்தார். உங்கள் வாழ்க்கையிலும், பிறருக்கு நீங்கள் சேவை செய்வதிலும் அவரைப் பின்பற்றுவது, நித்திய ஜீவனுக்கு ஒரே வழி.

அப்படியாக சாட்சியளித்து என் ஆசீர்வாதத்தையும் அன்பையும் உங்களுக்குக் கொடுக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஆமென்.

## நமது காலத்துக்கான போதனைகள்

நவம்பர் 2017லிருந்து ஏப்ரல் 2018வரை, நான்காம் ஞாயிற்றுக்கிழமைகளுக்கான மெல்கிசேதேக்கு ஆசாரியத்துவம் மற்றும் ஒத்தாசைச் சங்க பாடங்கள் அக்டோபர் பொதுமாநாட்டில் கொடுக்கப்பட்ட செய்திகளிலிருந்து ஆயத்தம் செய்யப்படுகின்றன. ஏப்ரல் 2018ல் செய்திகள் ஏப்ரல் அல்லது அக்டோபர் பொது மாநாட்டிலிருந்து தேர்வு செய்யப்படலாம். பிணைய மற்றும் சேகரத் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் எந்த செய்தி பயன்படுத்தப்படும் என தேர்வு செய்வார்கள், அல்லது இப்பொறுப்பை ஆயர்கள் அல்லது கிளைத் தலைவர்களுக்கு அவர்கள் கொடுக்கலாம்.

செய்திகள் அநேக மொழிகளில் கிடைக்கின்றன **conference.lds.org.**

©2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அஜநா-ல் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97931 418-ன் மொழிபெயர்ப்பு.



**தலைவர் டியட்டர் எப். உக்டர்ப்**
பிரதான தலைமையின் இரண்டாம் ஆலோசகர்

# மூன்று சகோதரிகள்

*நமது சீஷத்துவத்துக்கு நாமே பொறுப்பு, பிறர் நம்மை நடத்துகிற விதத்துக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை.*

அன்பான சகோதரிகளே, அன்பு நண்பர்களே, உலகளாவிய சகோதரிகளின் கூட்டத்துடன் பொது மாநாட்டைத் தொடங்குவது விசேஷமானது மற்றும் அற்புதமானது. கற்பனை செய்யுங்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்காக அனைத்து வயதுடைய, பின்னணியுள்ள, தேசங்களிலுள்ள, மொழி பேசுகிற சகோதரிகளும் விசுவாசத்திலும், அன்புடனும் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

நாங்கள் அண்மையில் நமது அன்பான தீர்க்கதரிசி, தலைவர் தாமஸ் எஸ். மான்சனை சந்தித்தோம். கர்த்தரை அவர் எவ்வளவு நேசிக்கிறார் என தெரிவித்தார். கர்த்தரில் உங்கள் அன்புக்காகவும், ஜெபங்களுக்காகவும், அர்ப்பணிப்புக்காகவும் தலைவர் மான்சன் உங்கள் மீது மிகவும் நன்றியுடையவராக இருக்கிறார் என நான் அறிவேன்.

நீண்ட காலத்திற்கு முன் மூன்று சகோதரிகளைக்கொண்ட ஒரு குடும்பம் தூரதேசம் ஒன்றில் வாழ்ந்து வந்தார்கள்.

முதல் சகோதரி துக்கமாயிருந்தாள். அவளுடைய மூக்கிலிருந்து நாடிவரை, அவளுடைய தோலிலிருந்து பாதங்கள்வரை எல்லாமுமே அவளுக்கு சரியாகத் தோன்றவில்லை. அவள் பேசும்போது, அவளுடைய வார்த்தைகள் சிலநேரங்களில் விகாரமாக வந்தது, மக்கள் சிரித்தார்கள். யாராவது அவளை விமர்சித்தாலோ எதற்காகவோ அவளை அழைக்க மறந்தாலோ அவள் முகம் சிவந்து, வெளியில் சென்று சோகமாக பெருமூச்சுவிட ஒரு இரகசிய இடத்தைக் கண்டுபிடித்து, ஏன் வாழ்க்கை மிக இருண்டும் சந்தோஷமில்லாதும் இருக்கிறதென வியப்புறுவாள்.

இரண்டாவது சகோதரி **பைத்தியமாயிருந்தாள்.** அவள் தன்னை சாமர்த்தியசாலி என நினைத்துக்கொண்டாள், ஆனால் பள்ளிக்கூடத்தில் எப்போதுமே யாரோ ஒருவர் பரிட்சையில் அதிக மதிப்பெண்கள் எடுத்தார்கள். அவள் தன்னை நகைச்சுவை தன்மையுடையவளாகவும், அழகானவளாகவும், நாகரீகமானவளாகவும், கவர்ச்சியானவளாகவும் கருதினாள். ஆனால் எப்போதுமே யாரோ ஒருவர் அதிக நகைச்சுவையுடையவராகவும், மிக அழகானவராகவும், அதிக நாகரீகமானவராகவும், மிக கவர்ச்சியானவராகவும் தோன்றினார்.

அவள் எப்போதுமே எதிலுமே முதலாவதாக இல்லை, இதை அவளால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. வாழ்க்கை இந்த வழியிலிருக்கக்கூடாது!

சிலநேரங்களில் மற்றவர்களை திட்டினாள், அவள் எப்போதுமே ஏதாவது

ஒரு காரியத்தால் அல்லது வேறொன்றால் எளிதில் கோபமடைந்தாள்.

இது அவளை விரும்பத்தக்கவளாகவோ புகழ்பெற்றவளாகவோ ஆக்கவில்லை. சிலநேரங்களில் அவள் தன் பற்களைக் கடித்துக்கொண்டு, முஷ்டிகளை இறுக்கிக்கொண்டு "வாழ்க்கை அநியாயமானது!" என நினைப்பாள்.

அடுத்து அங்கே மூன்றாவது சகோதரி. அவளுடைய துக்கமான மற்றும் பைத்தியமான சகோதரிகளைப் போலில்லாமல் அவள் நன்றாகவும் சந்தோஷமாகவுமிருந்தாள். இது, அவளுடைய சகோதரிகளைவிட அவள் அதிக சாமர்த்திசாலி, அதிக அழகானவள், அதிக திறமைசாலி என்பதாலில்லை. இல்லை, சிலநேரங்களில் மக்கள் அவளையும் புறக்கணித்தார்கள். அவள் அணிந்திருந்தவை அல்லது அவள் சொன்னவைகளை சிலநேரங்களில் அவர்கள் கேலி செய்தார்கள். மக்கள் சிலநேரங்களில் அவளைப்பற்றி மோசமாகச் சொன்னார்கள். ஆனால் அது எதுவுமே அவளை அதிகமாகக் கவலையடையச் செய்ய அவள் அனுமதிக்கவில்லை.

இந்த சகோதரிக்கு பாடப் பிடிக்கும். அவளுக்கு நல்ல சாரீரமில்லை, அதைப்பற்றி மக்கள் சிரித்தார்கள், ஆனால் அது அவளை நிறுத்தவில்லை. "மற்ற மக்களும் அவர்களுடைய கருத்துக்களும் பாடுவதிலிருந்து என்னை நிறுத்த நான் அனுமதிக்கப்போவதில்லை!" என அவள் சொல்வாள்.

உண்மையில் அவள் பாடிக்கொண்டிருந்தது, முதல் சகோதரியை துக்கமாகவும் அவளுடைய இரண்டாவது சகோதரியை பைத்தியமாகவும் ஆக்கியது.

அநேக ஆண்டுகள் கடந்தன, இறுதியாக ஒவ்வொரு சகோதரியும் பூமியில் அவர்களுடைய இறுதி நேர முடிவை அடைந்தார்கள்.

வாழ்க்கையில் ஏமாற்றங்களுக்கு குறைவில்லை என மீண்டும் மீண்டும் கண்டுபிடித்த முதல் சகோதரி இறுதியாக துக்கத்துடன் மரித்தாள்.

ஒவ்வொரு நாளும் விரும்பாமலிருக்க புதிதாக ஒன்றைக் கண்டுபிடிக்கிற இரண்டாவது சகோதரி பைத்தியமாக மரித்தாள்.

மூன்றாவது சகோதரி, அவளுடைய முழுபெலத்துடன் அவளுடைய பாட்டைப் பாடிக்கொண்டு அவளுடைய முகத்தில் ஒரு தன்னம்பிக்கையின் புன்னகையோடு சந்தோஷமாக மரித்தாள்.

வாழ்க்கை ஒருபோதும் மிக எளிதாயில்லை, இந்தக் கதையிலுள்ள மூன்று சகோதரிகளைப்போல மக்கள் ஒருபோதும் ஒரே பரிமாணத்திலிருப்பதில்லை. ஆனால் இவைகளைப்போல மிஞ்சிய எடுத்துக்காட்டுகள் நம்மைப்பற்றி எதையாவது நமக்குப் போதிக்கிறது. நம்மில் அநேகரைப்போல நீங்களிருந்தால், இந்த சகோதரிகளில் முதலாம் அல்லது இரண்டாம் அல்லது ஒருவேளை மூன்று சகோதரிகளும் உங்களைப் போலிருப்பதை நீங்கள் அடையாளம் கண்டிருக்கலாம். ஒவ்வொருவரையும் நாம் நெருக்கமாகப் பார்ப்போம்.

## வஞ்சிக்கப்பட்டவர்

முதல் சகோதரி, யாரோ ஒருவரால் செய்யப்பட்டதுபோல, தன்னை ஒரு வஞ்சிக்கப்பட்டவளாகப் பார்த்தாள்.[1] ஒன்றை அடுத்து ஒன்றாக தொடர்ந்து அவளுக்கு நேர்வதாகத் தோன்றியது, அவளை பரிதாபகரமாக்கியது. வாழ்க்கையின் இந்த அணுகுமுறையுடன், அவள் எப்படி உணர்ந்தாள், நடந்துகொண்டாள் என்பதன் கட்டுப்பாட்டை, மற்றவர்களுக்கு அவள் கொடுத்துக்கொண்டிருந்தாள். நாம் இதைச் செய்யும்போது ஒவ்வொரு அபிப்பிராயக் காற்றாலும் நாம் அடித்துச் செல்லப்படுகிறோம், தற்போதைய சமூக ஊடகத்தில் அந்த காற்று கடும்புயலின் வேகத்தில் அடிக்கிறது.

அன்பான சகோதரிகளே, உங்களைப்பற்றியோ, உங்களுடைய சந்தோஷங்களைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாத யாரோ ஒருவரிடத்தில் அல்லது யாரோ ஒரு குழுவினிடத்தில் நீங்கள் ஏன் உங்களுடைய சந்தோஷங்களை சரணடையச் செய்யவேண்டும்?

உங்களைப்பற்றி மற்ற மக்கள் என்ன சொல்கிறார்களென நீங்கள் கவலைப்படுவதாக நீங்கள் உங்களைக் கண்டால் இந்த மாற்று மருந்தைக் கொடுக்கிறேன். நீங்கள் யாரென்று நினைவுகூருங்கள். நீங்கள் தேவ இராஜ்ஜியத்தின் அரண்மனையிலுள்ளவர்கள், பிரபஞ்சம் முழுவதையும் ஆளுகிற பரலோக பெற்றோரின் குமாரத்திகள் என்பதை நினைவுகூருங்கள்.

தேவனின் ஆவிக்குரிய டிஎன்ஏ

உங்களிடமிருக்கிறது. உங்களுடைய ஆவிக்குரிய சிருஷ்டிப்பில் உண்டாக்கப்பட்ட, உங்களுடைய அநித்தியத்திற்கு முந்தைய வாழ்க்கையின் பரந்த வெளியில் விருத்தி செய்யப்பட்ட தனித்துவமான வரங்கள் உங்களிடமிருக்கிறது. நீங்கள், நம்முடைய இரக்கமுள்ள நித்திய பரலோக பிதாவின், சேனைகளின் கர்த்தரின், பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவரின், பரந்த வெளியில் சுழலும் நட்சத்திரங்களை பரப்பியவரின், அவர்களுக்குரிய சுற்றுப்பாதையில் கோளங்களை அமைத்தவரின் பிள்ளை.

நீங்கள் அவருடைய கரத்திலிருக்கிறீர்கள்.

மிகவும் நல்ல கரங்கள்.

அன்பான கரங்கள்

அக்கறையான கரங்கள்.

யாராவது உங்களைப்பற்றி பேசுகிற எதுவும் அதை மாற்றமுடியாது. தேவன் உங்களைப்பற்றி சொன்னதை ஒப்பிடும்போது அவர்களுடைய வார்த்தைகள் அர்த்தமற்றவை.

நீங்கள் அவருடைய அருமையான பிள்ளை.

அவர் உங்களை நேசிக்கிறார்.

நீங்கள் தடுமாறும்போதும், அவரிடத்திலிருந்து நீங்கள் விலகிப்போகும்போதும், தேவன் உங்களை நேசிக்கிறார். நீங்கள் காணாமற்போனதாக, கைவிடப்பட்டதாக, அல்லது மறக்கப்பட்டதாக உணர்ந்தால் பயப்படாதிருங்கள். நல்ல மேய்ப்பர் உங்களை கண்டுபிடிப்பார். அவர் உங்களைத் தூக்கி தன் தோள்களின்மேல் போட்டுக்கொள்வார். அவர் உங்களை வீட்டிற்கு தூக்கி வருவார்.[2]

எனக்கன்பான சகோதரிகளே, இந்த தெய்வீக சத்தியங்கள் உங்கள் இருதயங்களில் ஆழமாக மூழ்க அனுமதியுங்கள். துக்கமில்லாதிருக்க நீங்கள் அநேக காரணங்களை காண்பீர்கள், ஏனெனில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரு நித்திய இலக்கிருக்கிறது.

நீங்கள் அந்த இலக்கை உண்மையாக்க தேர்ந்தெடுக்கும்படியாக உலகத்தின் அன்புள்ள இரட்சகர் தனது ஜீவனைக் கொடுத்தார். நீங்கள் அவருடைய நாமத்தை உங்கள்மீது எடுத்துக்கொண்டீர்கள், நீங்கள் அவருடைய சீஷர்கள். அவரினிமித்தம் நீங்கள் நித்திய மகிமையின் அங்கிகளை உடுத்தமுடியும்.

## வெறுப்பவர்

இரண்டாவது சகோதரி உலகத்தின்மீது கோபமாயிருந்தாள். அவளுடைய துக்கமான சகோதரியைப்போல, அவளுடைய வாழ்க்கையில் யாரோ ஒருவர் பிரச்சினைகளுக்கு காரணமானவர் என அவள் உணர்ந்தாள். அவளை மட்டும் தவிர, எதிலும் யாரோடும் அவள் நினைத்ததுபோல நடக்காததற்காக எல்லாவற்றின்மேலும் அவள் குறைகூறினாள். அவளுடைய குடும்பத்தை, அவளுடைய நண்பர்களை, அவளுடைய மேலதிகாரியை, சகபணியாளர்களை, போலீஸை, அண்டைவீட்டாரை, சபைத்தலைவர்களை, தற்போதைய நாகரீக போக்கை, சூரிய ஒளியின் கடுமையை, சாதாரண துரதிருஷ்டத்தை அவள் குறை கூறினாள். அவைகள் எல்லாவற்றையும் அவள் திட்டினாள்.

அவள் தன்னை ஒரு மோசமான நபராக நினைக்கவில்லை. மாறாக, அவள் மாத்திரமே அவளுக்காக இருக்கிறாள் என உணர்ந்தாள். சுயநலத்தாலும், அற்பத்தனத்தாலும், வெறுப்பாலும் எல்லோருமே தூண்டப்படுகிறார்கள் என அவள் நம்பினாள். மாறாக, அவள் நல்ல எண்ணங்களுடனும், நீதியிலும், நேர்மையிலும், அன்பிலும் தூண்டப்படுகிறாள் என நினைத்தாள்.

துரதிருஷ்டவசமாக, பைத்தியமான சகோதரியின் சிந்திப்பின் போக்கு மிகப் பொதுவானது. இரண்டு போட்டிக் குழுக்களிடையில் அபிப்பிராய பேதம் கண்டுபிடிக்கப்பட்ட இது, சமீபத்திய ஒரு ஆய்வில் கவனிக்கப்பட்டது. ஆய்வின் பகுதியாக ஆராய்ச்சியாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பாலஸ்தீனியர்களையும் இஸ்ரவேலர்களையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியரசுவாதிகளையும், ஜனநாயகவாதிகளையும் நேர்காணல் செய்தனர். "தங்களின் குழு, வெறுப்பைவிட அன்பினாலேயே தூண்டப்பட்டனர் என ஒவ்வொரு பக்கமும் உணர்ந்தனர் என்பதை அவர்கள் கண்டுபிடித்தனர், ஆனால் அவர்களின் போட்டி குழு ஏன் அபிப்பிராய பேதத்தில் ஈடுபட்டனர் என கேட்கப்பட்டபோது, பிற குழுக்கள் தூண்டப்பட்ட காரணம் வெறுப்பு என [அவர்கள்] சுட்டிக்காட்டினர்."[3]

வேறு வார்த்தைகளிலெனில், ஒவ்வொரு குழுவும் தங்களை நல்ல மனிதர்களாக, நீதியுள்ளவர்களாக, இரக்கமுள்ளவர்களாக உண்மையுள்ளவர்களாக நினைத்தார்கள். மாறாக, அவர்களின் போட்டியாளர்களை அவர்கள் கெட்ட மனிதர்களாக, படிக்காதவர்களாக, நேர்மையில்லாதவர்களாக,

தீமையானவர்களாகக்கூட அவர்கள் பார்த்தார்கள்.

இத்தகைய பார்வைகள் நீண்ட மற்றும் பரிதாபமான வரலாற்றைக் கொண்டிருக்கிறது. நான் பிறந்த ஆண்டில், வேதனையான துக்கத்திற்கும் கட்டுக்கடங்காத வேதனைக்கும் காரணமான ஒரு பயங்கர யுத்தத்தில் உலகம் மூழ்கியிருந்தது. குறிப்பிட்ட பிற பிரிவினரை தீமையானவர்களாக அடையாளம்கண்டு, அவர்களுக்கு எதிராக வெறுப்பை ஊக்குவித்த என்னுடைய நாட்டின் ஒரு பிரிவின் மக்களால் இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

இதைப் பிடிக்காதவர்களை அவர்கள் அமைதியாக்கினார்கள். அவர்களை அவர்கள் அவமானப்படுத்தி பிசாசுகளாக்கினார்கள். மனிதர்களைவிட குறைவாக, அவர்களை தாழ்ந்தவர்களாக கருதினார்கள். ஒருமுறை ஒரு பிரிவின் மக்களை நீங்கள் அவமதித்தால், அவர்களுக்கெதிரான பலாத்காரத்தின் வார்த்தைகளையும் செயல்களையும் நீங்கள் அநேகமாக நியாயமாக்குவீர்கள்.

இந்த மனோபாவங்களால் 20வது நூற்றாண்டில் ஜெர்மனிக்கு என்ன நடந்ததென்பதைப்பற்றி நினைத்துப்பார்க்க நான் நடுங்குகிறேன்.

ஒருவர் நம்மை எதிர்த்தாலோ அல்லது ஒப்புக்கொள்ளாமலிருந்தாலோ அவர்களிடம் எதோ தவறிருக்கிறதென்று நினைக்க தூண்டப்படுகிறோம். அங்கிருந்து அவர்களுடைய வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் மோசமான நோக்கத்தை இணைக்க இது ஒரு சிறு படி.

எது சரியோ அதற்காக நாம் எப்போதும் நிற்கவேண்டும், அந்த காரணத்திற்காக நம் குரல்களை எழுப்பவேண்டிய காலங்கள் வரும். ஆயினும், நமது இருதயங்களில் கோபத்துடன் அல்லது வெறுப்புடன் நாம் அப்படிச் செய்யும்போது, காயப்படுத்த, அவமானப்படுத்த அல்லது அவர்களை அமைதியாக்க மற்றவர்களை திட்டும்போது, நாம் நீதியில் செய்யவில்லை என்பதற்கு வாய்ப்புகளிருக்கின்றன.

இரட்சகர் என்ன போதித்தார்?

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காவும் ஜெபம் பண்ணுங்கள்;

"இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்".[4]

இது இரட்சகரின் வழியாயிருக்கிறது. உலகத்தில் மிகுந்த கோபத்தையும், வெறுப்பையும், பிரிவினையையும், பலாத்காரத்தையும் உருவாக்குகிற தடங்கல்களை உடைத்தெறிவதில் இது முதல் படியாயிருக்கிறது.

"ஆம், என்னுடைய சத்துருக்கள் என்னை நேசிக்க விரும்புவதாயிருந்தால் அதையே செய்ய நானும் விருப்பமுள்ளவனாயிருக்கிறேன்" என நீங்கள் சொல்லலாம்.

ஆனால் அது உண்மையில் பொருட்டல்ல, இல்லையா? நமது சொந்த சீஷத்துவத்துக்கு நாம் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோம், நம்மை மற்றவர்கள் நடத்துவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பதிலுக்கு அவர்கள் புரிந்துகொண்டு அன்புள்ளவர்களாயிருப்பார்களென நாம் நம்பிக்கை வைப்போம், ஆனால் அவர்கள் மீது நமக்குள்ள அன்பு, நம்மீது அவர்களுக்கான உணர்வுகளிலிருந்து தனிப்பட்டது.

ஒருவேளை நம்முடைய சத்துருக்களை நேசிக்க நமது முயற்சிகள் அவர்களுடைய இருதயங்களை மிருதுவாக்கி நன்மைக்காக அவர்களை செல்வாக்கடையச் செய்யும். ஒருவேளை இது அப்படிச் செய்யாது. ஆனால், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற நமது ஒப்புக்கொடுத்தல் மாறாது.

ஆகவே, இயேசு கிறிஸ்து சபையின் அங்கத்தினர்களாக, நாம் நமது சத்துருக்களை நேசிப்போம்.

கோபத்தையும் வெறுப்பையும் நாம் மேற்கொள்வோம்.

தேவனுடைய பிள்ளைகள் யாவர்மீதும் அன்புடன் நம் இருதயங்களை நிரப்புவோம்.

"[நம்மை] நிந்திக்கிறவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களையும்"[5], ஆசீர்வதிக்க மற்றவர்களை நாம் அணுகி அவர்களுக்கு பணிவிடை செய்வோம்.

## நிச்சயமான சீஷன்

மூன்றாவது சகோதரி இயேசு கிறிஸ்துவின் நிச்சயமான சீஷனை பிரதிபலித்தாள். செய்வதற்கு கடினமான ஒன்றை அவள் செய்தாள், பரிகாசத்திற்கு முன்பும் அவள்

தேவனை நம்பினாள். அவளைச் சுற்றி இகழ்ச்சி மற்றும் குற்றப்படுத்துதல் இருந்தாலும் எப்படியாவது அவளுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அவள் பராமரித்தாள். அவளுடைய சூழ்நிலைகள் மகிழ்ச்சியாயிருந்ததால் அல்ல, அவள் மகிழ்ச்சியாயிருந்ததால், அவள் சந்தோஷமாக வாழ்ந்தாள்.

எதிர்ப்பில்லாமல் நம்மில் யாரும் வாழ்க்கைப் பயணத்தில் பயணிக்கவில்லை. அநேக சக்திகள் நம்மை புறம்பே தள்ள முயற்சிக்கும்போது, விசுவாசிகளுக்கு வாக்களிக்கப்பட்ட மகிமையான சந்தோஷத்தில் எவ்வாறு நாம் நம் பார்வையை வைப்போம்?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தீர்க்கதரிசி பெற்ற தரிசனத்தில் பதில் காணப்படமுடியுமென்று நான் நம்புகிறேன். தீர்க்கதரிசியின் பெயர் லேகி, அவனுடைய தரிசனம் மார்மன் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அவனுடைய தரிசனத்தில் லேகி ஒரு பரந்த விசாலமான வெளியைக் கண்டான், அதில் விவரிக்க முடியாத அழகான, ஒரு அற்புதமான விருட்சமிருந்தது. திரளான ஜனக்கூட்டம் அந்த விருட்சத்தை நோக்கி நடந்து சென்றதையும் அவன் கண்டான். அதன் மகிமையான கனியை அவர்கள் புசிக்க விரும்பினார்கள். அது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் நிலையான சமாதானத்தையும் கொடுக்குமென அவர்கள் உணர்ந்து நம்பினார்கள்.

விருட்சத்திற்கு நடத்திச் சென்ற பாதை நெருக்கமாயிருந்தது, அவர்கள் பாதையில் செல்ல கரையோரமாயிருந்த ஒரு இருப்புக்கோல் அவர்களுக்குதவியது. பாதை மற்றும் விருட்சத்தின் மீது அவர்களின் பார்வையை மறைத்த மந்தாரமான இருள் அங்கிருந்தது. பக்கத்திலிருந்த பெரிய விசாலமான கட்டிடத்திலிருந்து வந்துகொண்டிருந்த கேலிச் சிரிப்பின், உரத்த சத்தம் ஒருவேளை மிகவும் அபாயகரமானதாயிருந்திருக்கலாம். அதிர்ச்சியடையத்தக்கதாக, கேலிசெய்தல் விருட்சத்தை அடைந்து அற்புதமான கனியைப் புசித்தவர்கள் வெட்கப்பட்டு, விலகிச்செல்வதையும் சில ஜனங்களை ஏற்றுக்கொள்ள வைத்தது.[6]

விருட்சம் அழகானதென ஒருசமயம் அவர்கள் நினைத்ததைப்பற்றி ஒருவேளை அவர்கள் சந்தேகப்பட ஆரம்பித்திருக்கலாம். ஒருவேளை அவர்கள் அனுபவித்ததின் உண்மையைப்பற்றி அவர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்.

விருட்சத்திலிருந்து விலகிப்போனால் வாழ்க்கை எளிதாயிருக்கலாமென அவர்கள் நினைத்திருக்கலாம். இனியும் அவர்கள் கேலி செய்யப்படாமல் அல்லது நகைக்கப்படாமலிருந்திருக்கலாம்.

உண்மையில், அவர்களை கேலி செய்துகொண்டிருந்த ஜனங்கள் மிக மகிழ்ச்சியாகவும் நல்ல நேரத்திலிருந்ததாகவும் தோன்றுகிறது. ஆகவே, அவர்கள் ஒருவேளை விருட்சத்தை கைவிட்டால் அவர்கள் அந்த பெரிய விசாலமான கட்டிடத்திற்குள் வரவேற்கப்பட்டு அவர்களுடைய தீர்மானத்துக்காகவும், புத்திசாலித்தனத்திற்காகவும், உயர்ந்த தரத்திற்காகவும் பாராட்டப்பட்டிருப்பார்கள்.

## பாதையில் நிலைத்திருங்கள்

அன்பான சகோதரிகளே, அன்பான நண்பர்களே, இருப்புக் கோலைக் கெட்டியாகப் பிடிக்கவும் இரட்சிப்பை நோக்கி உறுதியாய் நடக்கவும் நீங்கள் கஷ்டப்பட்டால், நீங்கள் அசைக்கப்படுவதற்கு மிகுந்த நம்பிக்கையுள்ளவர்களாகத் தோன்றுகிறவர்களின் சிரிப்பும் கேலியும் காரணமாயிருந்தால், பதிலளிக்கமுடியாத கேள்விகளால் அல்லது இன்னமும் நீங்கள் புரிந்துகொள்ளமுடியாத கோட்பாடுகளால் உங்களுக்கு தொந்தரவு இருந்தால், ஏமாற்றங்களால் நீங்கள் துக்கமடைந்தால், லேகியின் தரிசனத்தை நினைவுகூர நான் உங்களை வலியுறுத்துகிறேன்.

பாதையில் நிலைத்திருங்கள்

இருப்புக்கோலை, தேவனின் வார்த்தையைக் கைவிடாதிருங்கள்.

தேவனின் அன்பில் பங்கேற்பதற்காக உங்களை வெட்கப்பட வைக்க யாராவது முயற்சிக்கும்போது அவர்களை அசட்டை செய்யுங்கள்.

நீங்கள் தேவனின் பிள்ளை என்பதை ஒருபோதும் மறக்காதிருங்கள், ஏராளமான ஆசீர்வாதங்கள் காத்திருக்கின்றன, அவருடைய சித்தத்தின்படி செய்ய நீங்கள் கற்றுக்கொண்டால் மீண்டும் அவருடன் நீங்கள் வாழுவீர்கள்![7]

உலகத்தால் கொடுக்கப்படுகிற புகழ் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல், நம்பமுடியாததும், உண்மையில்லாததும், திருப்தியில்லாததாகவும் இருக்கும். தேவனின் வாக்குத்தத்தம் இப்போதும்

எப்போதும் நிச்சயமானதாயும், உண்மையானதாகவும் மகிழ்ச்சியுள்ளதாயுமிருக்கும்.

ஒரு உயர்ந்த பார்வையில் மதத்தையும் விசுவாசத்தையும் கருத உங்களை நான் அழைக்கிறேன். பெரிய விசாலமான கட்டிடத்தில் கொடுக்கப்படுகிற எதுவுமே இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்படி ஜீவிக்கிற கனியுடன் ஒப்பிடமுடியாதது.

உண்மையில், "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை."[8]

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் சீஷத்துவத்தின் பாதை, மகிழ்ச்சியின் பாதை என்பதை நானே அறிந்துகொண்டேன். இது பாதுகாப்புக்கும், சமாதானத்துக்குமான பாதை. இது சத்தியத்திற்கான பாதை.

பரிசுத்த ஆவியின் வரம் மற்றும் வல்லமையைப் பற்றி நான் சாட்சியளிக்கிறேன், இதை நீங்களே அறிந்துகொள்வீர்கள்.

அதே நேரத்தில், பாதை உங்களுக்கு கடினமாக மாறினால், ஆரம்ப வகுப்பு, இளம்பெண்கள் மற்றும் ஒத்தாசைச் சங்கம் போன்ற சபையிலுள்ள அற்புதமான அமைப்பில் நீங்கள் அடைக்கலத்தையும், பெலத்தையும் காண்பீர்களென நான் நம்புகிறேன். முன்னாலிருக்கிற பாதைக்காக உங்கள் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் புதுப்பித்துக்கொள்ளுகிற அவைகள் பாதையின் வழிகுறிப்புகள். சொந்த வீடாக நீங்கள் உணருகிற, உங்கள் சகோதரிகளிடமிருந்தும் சக சீஷர்களிடமிருந்தும் ஊக்குவித்தலைப் பெறுகிற அவைகள் பாதுகாப்பின் வீடு.

ஆரம்ப வகுப்பில் நீங்கள் கற்றுக்கொள்ளும் காரியங்கள் இளம்பெண்ணாக நீங்கள் கற்றுக்கொள்ளும் கூடுதலான சத்தியங்களுக்கு ஆயத்தமாயிருக்கும். உங்களுடைய இளம் பெண்கள் வகுப்பில் நீங்கள் நடக்கிற சீஷத்துவத்தின் பாதை, ஒத்தாசைச் சங்கத்தின் ஐக்கியத்திற்கும் சகோதரியத்துவத்திற்கும் நடத்துகிறது. பாதையில் ஒவ்வொரு அடியினூடே, இரக்கம், தயாளம், மற்றும் சேவையின் செயல்கள் மூலமாக மற்றவர்களிடத்தில் உங்களுடைய அன்பைக் காட்ட உங்களுக்கு கூடுதலான சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகிறது.

சொல்லப்படாத சந்தோஷத்திற்கும் பரிபூரணத்திற்கும், சீஷத்துவத்தின் இந்த பாதை நடத்துகிறது.

இது எளிதாயிருக்கும். உங்கள் புத்திசாலித்தனம், உருவாக்கும்திறன், விசுவாசம், நேர்மை, பெலன், தீர்மானிப்பு, அன்பு போன்ற உங்களிடமுள்ள மிகச் சிறந்த எல்லாமுமே இதற்கு தேவையாயிருக்கிறது. ஆனால் ஒருநாள் உங்கள் முயற்சிகளைத் திரும்பிப் பார்க்கும்போது, நீங்கள் பெலமாக நிலைத்திருந்ததற்கும், நீங்கள் நம்பியிருந்ததற்கும், நீங்கள் பாதையிலிருந்து விலகாததற்கும், நீங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருப்பீர்கள்.

முன்னேறிச் செல்லுங்கள்

உங்களுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பால் வாழ்க்கையில் அநேக காரியங்களிருந்திருக்கலாம். ஆனால் முடிவில், உங்கள் இலக்கு மற்றும் பாதையில் உங்கள் அனுபவங்கள் இரண்டிலுமிருந்து தேர்ந்தெடுக்க உங்களுக்கு ஆற்றலிருக்கிறது. உங்கள் திறமைகளில்லை, உங்கள் தேர்ந்தெடுப்புகளே உங்கள் வாழ்க்கையில் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது.[9]

சூழ்நிலைகள் உங்களை துக்கப்படுத்த நீங்கள் அனுமதிக்க முடியாது.

உங்களை பைத்தியமாக்க அவைகளை நீங்கள் அனுமதிக்க முடியாது.

நீங்கள் தேவனின் குமாரத்தி என்பதில் நீங்கள் களிகூரலாம். தேவனின் கிருபையிலும் இயேசு கிறிஸ்துவின் அன்பிலும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் நீங்கள் காணமுடியும்.

நீங்கள் சந்தோஷமாயிருக்கலாம்.

ஏராளமான அளவிடமுடியாத தேவனின் நன்மைக்காக நன்றியுணர்வுடன் உங்கள் இருதயங்களை நிரப்ப நான் உங்களை வலியுறுத்துகிறேன். என்னுடைய அன்பான சகோதரிகளே, இதை உங்களால் செய்யமுடியும்! ஜீவவிருட்சத்திற்கு நேராக முன்னேறிச் செல்ல நீங்கள் தேர்ந்தெடுப்பீர்களென என்னுடைய ஆத்துமாவின் முழு பாசத்துடன் நான் ஜெபிக்கிறேன். நீங்கள் உங்கள் குரலை உயர்த்த தீர்மானித்து, உங்கள் வாழ்க்கையை துதியின் மகிமையான இசையாகச் செய்து தேவனின் அன்பிலும், அவருடைய சபை மற்றும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்

உலகத்திற்குக் கொண்டுவரக்கூடிய அற்புதங்களில் களிகூருவீர்களென்றும் நான் ஜெபிக்கிறேன்.

உண்மையான சீஷத்துவத்தின் பாடல் சிலருக்கு சுமையாகவும், மிகவும் சத்தமாகவும்கூட இருக்கலாம். காலங்களின் ஆரம்பத்திலிருந்தே இது இப்படித்தானிருந்தது.

ஆனால் நமது பரலோக பிதாவுக்கும், அவர்மீது அன்பு வைத்து அவரைக் கனம்பண்ணுகிறவர்களுக்கும் இது கம்பீரமான, மீட்பு, அன்பு, சுத்திகரிப்பு மற்றும் தேவனுக்கும் சகமனிதர்களுக்கும் சேவை ஆகிய மிக அருமையான, அழகிய பாடல்.[10]

சீஷத்துவத்தின் மகிமையான பாதையில் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியாக நடந்துகொண்டிருக்கும்போது தேவனின் குமாரத்தியாக மகிழ்ச்சியாக முன்னேற பெலத்தை நீங்கள் காண்பீர்களென்று, கர்த்தரின் அப்போஸ்தலனாக எனது ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொடுக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில், ஆமென்.

குறிப்புகள்

1. 2 நேபி 2:14, 26 பார்க்கவும்.
2. லூக்கா 15:4–6 பார்க்கவும்.
3. Boston College, "Study Finds Intractable Conflicts Stem from Misunderstanding of Motivation," *Science Daily,* Nov.{nb}4, 2014, sciencedaily.com.
4. மத்தேயு 5:44–45.
5. மத்தேயு 5:44.
6. 1 நேபி 8 பார்க்கவும்.
7. See "I Am a Child of God," *Children's Songbook*, 2–3.
8. 1 கொரிந்தியர் 2:9.
9. See "The Most Inspirational Book Quotes of All Time," pegasuspublishers.com/blog.
10. ஆல்மா 5:26 பார்க்கவும்

© 2017 எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அஜநா-ல் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97931 418-ன் மொழிபெயர்ப்பு.